சோதனை இலக்கம்: EN - 04 (2) நான்கு இருவாயிகளைப் பயன்படுத்தி முழு அலைச்சீராக்கச் சுற்றை அமைத்தல்

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. நிலைமாற்றி 240v → 12v × 2
2. இருவாயி 1N 4001 - 04
3. கொள்ளளவி 2204F, 16v
4. இணைப்புக்கம்பி (Single Stand wire)
5. செயற்றிட்டப் பலகை (Project board)
6. கதோட் கதிர் அலைவுகாட்டி (C.R.O)

செயல் ஒழுங்குமுறை

1. தரப்பட்ட இலத்திரனியல் கூறுகளையும் உபகரணங்களையும் பரீட்சார்த்திக்கு வழங்கல்.
2. சுற்றின் இணைப்பு முறையை அவதானித்து சரியாயின் வலுவை வழங்கி CRO இல் பயப்பு அலை வடிவத்தை நோக்குக.

செய்முறை

EN - 04 (b) முழு அலைச் சீராக்கத்தின் பால சுற்றை அமைக்க. input ஐ வழங்கி Output ஐ C.R.o இல் பெற்றுக்காட்டுக.



A, B முடிவிடங்கள் CRO ற்கு

மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	நிலைமாற்றி முடிவிடங்களைச் சரியாக இனங்காணல்	10	
2	இருவாயிகளை சமுனைவுத்தன்மையின் படி சரியாக இணைத்தல்.	40	
3	கொள்ளளவியை முனைவுத் தன்மைப்படி சரியாக இணைத்தல்	20	
4	சுற்றின் செம்மை (Neatness)	10	
5	சுற்றின் பயப்பை C.R.O இல் காட்டுதல்.	20	
	மொத்தம்	100	

The National e-learning Portal for The General Education

சோதனை இலக்கம்: EN - 04 (3) மையத்தொகுதி நிலைமாற்றியையும் இரு இருவாயிகளையும் பயன்படுத்தி முழு அலைச் சீராக்கி சுற்றை அமைத்தல்

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. நிலைமாற்றி 240v → 12v × 2 - 01
2. இருவாயி 1N 4001 - 02
3. கொள்ளளவி 2204F, 6v - 01
4. இணைப்புக்கம்பி (Single Stand wire)
5. செயற்றிட்டப் பலகை (Project board)
6. கதோட் கதிர் அலைவுகாட்டி (C.R.O)

செயல் ஒழுங்குமுறை

1. தரப்பட்ட இலத்திரனியல் கூறுகளையும் உபகரணங்களையும் பரீட்சார்த்திக்கு வழங்கல்.
2. சுற்றின் இணைப்பு முறையை அவதானித்து சரியாயின் வலுவை வழங்கி CRO இல் பயப்பு அலை வடிவத்தை நோக்குக.

செய்முறை

EN - 4 .3 முழு அலைச் சீராக்க பால சுற்று தரப்பட்டுள்ளது. input ஐ வழங்கி Output ஐ C.R.o இல் பெற்றுக்காட்டுக. ஒப்பமாக்கலை மேற்கொள்ள பொருத்தமாக கொள்ளளவியைப் பொருத்தி மீண்டும் Output ஐ C.R.O இல் பெற்றுக்காட்டுக.



A, B முடிவிடங்கள் - C. R. O இற்கு

மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	நிலைமாற்றி முடிவிடங்களைச் சரியாக இனங்காணல்	20	
2	இருவாயிகளை முனைவுத்தன்மையின் படி சரியாக இணைத்தல்.	20	
3	வலுவை வழங்கி பயப்பு அலைவடிவத்தை நோக்குக.	20	
4	கொள்ளளவியை முனைவுத் தன்மைக்கேற்றபடி சரியாக இணைத்தல்	20	
5	மீண்டும் வலுவை வழங்கி பயப்பு அலை வடிவத்தை C.R.O இல் காட்டுதல்.	20	
	மொத்தம்	100	

The National e-learning Portal for The General Education

சோதனை இலக்கம்: EN - 05 மூவாயியின் வகைகளையும், அவற்றின் முடிவிடங்களையும் இனங்காணல்

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. PNP, NPN - Transistor
2. Multimeeter *(பல்மானி) ஒப்புளி*
3. Project Board

செய்முறை

பரிசோதனை இல. EN - 05 *மூவாயி* (Transistor) *வகைகளையும் அவற்றின் முடிவிடங்களையும் இனங் காணுதல்.*

A, B, C, *எனப் பெயரிடப்பட்டு உமக்கு வழங்கப்பட்டுள்ள* Transistor *மூவாயிகளின் வகைகளைக் கண்டறிந்து குறிப்பிடுவதுடன் அவற்றின் முடிவிடங்களின் தன்மைகளையும் குறிப்பிடுக.*

Transistor	வகை (PNP, NPN, FET)
A	
B	
C	

Transistor	அடி (Base)	சேகரிப்பான் (Collector)	காலி (Emiter)
A			
B			

மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	Transistor தேர்ந்தெடுத்தல்.	*10*	
2	வகைகளை இனங்காணல்	*40*	
3	B, E, C முனையைக் கண்டறிதல்.	*40*	
4	பல்மானியை சரியாக பயன்படுத்தல்.	*10*	
	மொத்தம்	*100*	

The National e-learning Portal for The General Education

சோதனை இலக்கம்: EN - 06.1 மூவாயியை (Transistor) ஆளியாகப் பயன்படுத்தி சுற்றை அமைத்தல்

EN - 06.1 மூவாயியை ஆளியாகப் பயன்படுத்தி சுற்றை அமைத்தல். (LDR பயன்படுத்தல்)

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. தடையி 10kΩ - *02*
2. மாறும் தடையி (Preset) 10 k Ω - *01*
3. LDR - *01*
4. திரான்சிஸ்ரர் C828 - *01*
5. தடையி 220 Ω - 01
6. Vero board - *01*
7. ஒப்புளி பன்மானி / Arolog - *01*
8. Soldering iron *(பவுத்)*
9. ஈயம்
10. ஒற்றைக்கம்பி (Single stardard wire)
11. வெட்டும் குறடு
12. Paper cutter
13. 5v நேரோட்ட வலு வழங்கி
14. LED - *01*

செயல் ஒழுங்குமுறை

1. சுற்றை அமைப்பதற்கான இலத்திரனியல் பொருட்களையும், உபகரணங்களையும் பரீட்சார்த்தியிடம் சமர்ப்பிக்குக.
2. சரியான முனைவுத் தன்மையின்படி பற்றாசு பிடிக்கப்பட்ட சுற்றுக்களை வலு வழங்கலுடன் தொகுத்து சரி பார்க்க.

செய்முறை

EN - 06 **மூவாயியை ஆளியாகப் பயனப்டுத்தி சுற்றை அமைத்தல்.** (LDR **பயன்படுத்தல்**)

வினா :- திரான்சிஸ்ரரானது ஆளியாகப் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இருளில் LED ஒளிரும் வகையில் கீழே தரப்பட்டுள்ள சுற்றை வீரோ பலகையில் (Vero board) பற்றாசு பிடிக்க.

மாறும் தடையியை செப்பஞ் செய்யுத இருளில் LED ஒளிருமாறு சுற்றை அமைத்து தொழிற்படச் செய்து காட்டுக.





மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	தடையிகளை சரியாக தெரிந்தெடுத்தல்.	*10*	
2	தடையிகளைச் சரியான இடத்தில் தொடுத்தல்	*10*	
3	LDR ஐ இனங்காணலும், சரியாக இணைத்தலும்	*10*	
4	திரான்சிஸ்ரரின் முடிவிடங்களைச் சரியாக தொடுத்தல்	*20*	
5	சரியான முறையில் பற்றாசு பிடித்தல் (45^0, angle)	*10* *10*	
6	வழங்களை அளித்தல்	*15*	
7	சுற்றின் சரியான தொழிற்பாடு	*15*	
	மொத்தம்	*100*	

சோதனை இலக்கம்: EN - 06.2 மூவாயியை (Transistor) ஆளியாகப் பயன் படுத்தி சுற்றை அமைத்தல்

EN - 06 (02) Relay Switch **ஐ பயன்படுத்தி ஆளிச் செயற்பாட்டின் மூலம் கூடிய மின்னோட்டம், அழுத்தங்களை கட்டுப்படுத்துதல்.**

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. தடையி 10kΩ - *01*
2. மாறும் தடையி (Preset) 10 k Ω - *01*
3. LDR - *01*
4. திரான்சிஸ்ரர் C828 - *01*
5. திரான்சிஸ்ரர் D 400 - 01
6. Relay - 5v → 230v - *01*
7. இருவாயி (IN 4001) - *01*
8. Bulb 23w, 240w, 240v (Same Energy Bulb) - *01*
9. Soldering iron
10. ஈயம்
11. ஒற்றைக்கம்பி (Single standary wire)
12. வெட்டும் குறடு
13. Paper Cutter
14. 9v வலு வழங்கி
15. Vero board

செயல் ஒழுங்குமுறை

1. சுற்றை அமைப்பதற்கான இலத்திரனியல் பொருட்களையும், உபகரணங்களையும் பரீட்சார்த்தியிடம் சமர்ப்பிக்குக.
2. சுற்றின் செம்மைத் தன்மையை அவதானித்து அவதானமாக வலு வழங்கலை தொடுக்கவும்.

செய்முறை

EN - 06 **(02) மூவாயியை ஆளியாகப் பயன்படுத்தி சுற்றை அமைத்தல்.**

வினா :- திரான்சிஸ்ரரானது ஆளியாகப் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இருளில் 240v, 23w மின்குமிழ் ஒளிரும் வகையில் கீழே தரப்பட்டுள்ள சுற்றை வீரோ பலகையில் (Vero board) பற்றாசு பிடிக்க.

Relay இன் முடிவிடங்களை திருத்தமாக இனங்கண்டு இரவில் மின்குமிழ் தானாக ஒளிரத்தக்கதாக முடிவிடங்களை அமைக்க.

Note : 230v மின் அழுத்த வேறுபாடு பயன்படுத்தப்படுவதால் அவதானமாகச் செயற்படும்.

பற்றாசு பிடிக்கப்பட்ட Vero board ஐ ஆசிரியரிடம் காட்டி செம்மை அறியப்பட்ட பின்னரே வலு வழங்கியுடன் தொடுக்க.





மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	தடையிகளை சரியாக தெரிந்தெடுத்தல்.	10	
2	தடையிகளைச் சரியான இடத்தில் தொடுத்தல்	10	
3	LDR ஐ சரியான இடத்தில் தொடுத்தல்	10	
4	திரான்சிஸ்ரரின் சரியாக முறையில் தொடுத்தல்	20	
5	சுநடயல ன் முடிவிடங்களை சரியாக இணைத்தல்.	20	
6	சரியான முறையில் சுற்றினை பற்றாசு பிடித்தல் (45^0 angle)	05 05	
7	சரியான முறையில் பிரதான வலு வளங்கலுடன் இணைத்தல்	10	
8	சுற்றின் சரியான தொழிற்பாடு	10	
	மொத்தம்	100	

சோதனை இலக்கம்: EN - 07 மூவாயியை விரியலாக்கியாகப் பயன்படுத்தல்

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. தடையி 2.2k Ω - *02*
2. தடையி 27 kΩ - *01*
3. மாறும் தடையி (Preset) 50 k Ω - *01*
4. திரான்சிஸ்ரர் - 2N 2904 / 2N 3904
5. செயற்றிட்டப் பலகை (Bread board)
6. ஒற்றைக்கம்பி (Single strand wire)
7. கொள்ளளவி - 10μF - *02*
8. கொள்ளளவி - 22μF - *01*
9. வெட்டும் குறடு
10. Paper Cutter
11. நேரோட்ட வலு வழங்கி (9v)
12. கதோட்டு கதிர் அலைவுகாட்டி (CRO)

செயல் ஒழுங்குமுறை

1. சுற்றை அமைப்பதற்கான இலத்திரனியல் பொருட்களையும், உபகரணங்களையும் பரீட்சார்த்தியிடம் சமர்ப்பிக்க.

செய்முறை

EN - 06 (02) மூவாயியை வீரவலாக்கியாகப் பயன்படுத்துதல்.

வினா :- மூவாயியொன்றின் விரியலாக்கும் செயற்பாட்டை CRO இல் நோக்குவதற்காக கீழே தரப்பட்டுள்ள சுற்றை செயற்றிட்டப் பலகையில் (Bread board) இல் கோர்க்க.

மூவாயியிற்கு வலு வழங்க முன்னர் சுற்றினை ஆசிரியரின் காட்டி அனுமதியைப் பெறுக.

வலு வழங்கிய பின் CRO இல் பெய்ப்பு (XY), பயப்பு (AB) அலை வடிவங்களை ஒரே நேரத்தில் நோக்குக.

சுற்றின் அழுத்த நயத்தினைக் காண்க? $\frac{V_0}{Vin}$



xy - Channel - 1 (CRO)
AB - Channal - 2 (CRO)

மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	தடையிகளை சரியாக தெரிந்தெடுத்தல்.	10	
2	தடையிகளைச் சரியான இடத்தில் தொடுத்தல்	15	
3	கொள்ளவிகளை சரியான முறையில் தொடுத்தல்	15	
4	திரான்சிஸ்ரரின் முடிவிடங்களை தொடுத்தல்	20	
5	சுற்றின் ஒழுங்குமுறை (neadness)	15	
6	பெயர்ப்பு அலைவடிவத்தை CRU இல் இட்டல்	10	
7	பயப்பு அலை வடிவத்தை CRO இல் காட்டல்	10	
8	அழுத்தநயம் காணல்	10	
	மொத்தம்	100	

சோதனை இலக்கம்: EN - 08 (Digital) இலத்திரனியலின் எளிய பல்அதிரி சுற்றுமூலம் LED ஐ கட்டுப்படுத்தல்.

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. தடையி 10 k Ω - 02
2. கொள்ளளவி 10 kf - 02
3. கொள்ளளவி 100 k f - 02
4. திரான்சிஸ்ரர் C282 - 02
5. L.E.D - 02
6. வலு வழங்கி 3v
7. செயற்றிட்டப் பலகை (Bread Board)
8. ஒற்றைக்கம்பி (Single strand wire)
9. வெட்டும் குறடு
10. Paper Cutter

செயல் ஒழுங்குமுறை

1. சுற்றை அமைப்பதற்கான இலத்திரனியல் பொருட்களையும், உபகரணங்களையும் பரீட்சார்த்தியிடம் சமர்ப்பிக்க.
2. சுற்று சரியாக கோர்க்கப்பட்டுள்ளதா எனப் பார்த்து வலுவை வழங்குக.

செய்முறை

EN - 08 இலக்க இலத்திரனியலின் எளிய பல் அதிரி சுற்று மூலம் டுநுனு ஐ கட்டுப்படுத்தல்.

வினா :- தரப்பட்ட சுற்று வரிப்படத்திற்கமைய சுற்றினை செயற்றிட்டப் பலகையில் ஒழுங்கமைத்து சுற்றின் செயற்பாட்டினைப் சரி பார்த்து கொள்க.

வழங்கப்பட்ட 10µF கொள்ளளவிகளை 100µF ஆக மாற்றி தற்போது LED ஒளிர்த்தலிற்கான நேர இடைவெளியை ஒப்பிடுக.



மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	தடையிகளை சரியாக தெரிந்தெடுத்தல்.	10	
2	தடையிகளைச் சரியான இடத்தில் இணைத்தல்	10	
3	LED ஐ முனைவுத்தன்மைப்படி இணைத்தல்	20	
4	கொள்ளவிகளை இணங் காணல்	10	
5	கொள்ளளவிகளை இணைத்தல்	10	
6	திரான்சிஸ்ரர்களை சரியான முறையில் இணைத்தல்	20	
7	சுற்றின் சரியான செயற்பாடு	15	
8	கொள்ளளவியை 100µF பிரதியிட்டு LED ஒளிர்த்தலிற்கான நேர இடைவெளியை ஒப்பிடல்.	10	
	மொத்தம்	100	

சோதனை இலக்கம்: EN - 09 திசை மாற்றும் (inverting) செயற்பாட்டு விரிவலாக்கி சுற்றை அமைத்தல்

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. IC (741)
2. 10K, 100k தடைகள்
3. Singal Genaration
4. C.R.O
5. Project board

செய்முறை

EN - 09 செயற்பாட்டு விரிவலாக்கி சுற்றை அமைத்தல்

EN - 09 திசை மாற்றும் (Inverting) செயற்பாட்டு விரிவலாக்கிச் சுற்றை அமைக்க. கீழே தரப்பட்டுள்ள சுற்றின்படி, செயற்பாட்டு விரிவலாக்கி ஒன்றினைப் பயன்படுத்தி நேர்மாற்றி விரியலாக்கி ஒன்றினை அமைக்குக. அதற்காக உங்களுக்குத் தரப்பட்டுள்ள ஒன்றிணைந்த சுற்றுக்களையும் தடைகளையம் பயன்படுத்துக.

சுற்றைச் செயற்றிட்டப் பலகையில் சரியாக ஒழுங்குசேர்த்துச் செயற்றிட்டப் பலகையில் சரியான இடங்களுக்கு மின்வழங்கலைத் தொடுக்க ஒன்றிணைந்த சுற்றுக்கு இரட்டை வழங்கல் வழங்குதல் வேண்டும். பெயர்ப்பு வழங்குதல் மற்றும் பயப்பைப் பெறுதலை புவித்தொடுப்பு முனைக்குச் சரியாகச் செய்தல் வேண்டும்.

இதற்காக சைகை பிறப்பாக்கி மூலம் 10mvpp வழங்கி, பெயர்ப்பு இழைகாட்டி மூலம் அளந்து விடைத்தாளில் எழுதுக.

பெறுபேறு சமன்பாட்டுக்கு அமையவாறு எனக் காண்க.

$$V_0 = -V_{in} \frac{R_2}{R_1}$$





குறிப்பு :

மின்குமிழ்களையும் பயப்புச்சமிக்ஞைகளையும் வழங்க முன்னர் பரீட்சகருக்கு காட்டி அனுமதியைப் பெறுக.

அலைவுகாட்டியைச் சுற்றுடன் தொடுத்து பரீட்சகருக்குக் காட்டுக.

i. நேர்மாற்றி விரியலாக்கியின் பெயர்ப்பின் அலையை வரைக.

ii. நேர்மாற்றி விரயலாக்கியின் பயப்பின் அலையை வரைக.

iii. மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களிலும் vpp பெறுமானங்களை எடுத்து $V_o = -V_{in}\frac{R_2}{R_1}$ சமன்பாடு உண்மையானது எனக் காட்டுக.

மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	சரியான IC ஐ தெரிந்தெடுத்தல்	10	
2	சரியான தடைகளைத் தெரிந்தெடுத்தல்	10	
3	சுற்றைச் சரியாக அமைத்தல்	20	
4	சரியான செயற்பாட்டு அழுத்தத்தினை வழங்கல்	20	
5	ஆடலோட்ட வழங்கலை வழங்கல்	10	
6	பயப்பினை (output I CRO இல் பெறுதல்)	10	
7	Output, input valtage அளத்தல் (CRO)	10	
8	சமநிலையின்படி Nont ஐ கணித்தல்	10	
	மொத்தம்	100	

சோதனை இலக்கம்: EN - 10 555 Signal Generator சுற்றை அமைத்தல்

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. IC (555)
2. தடைகள் 1K
3. கொள்ளளவிகள் 4n7, 10nμ
4. 1M VR
5. DC Power Supply
6. C.R.O
7. Project board

செய்முறை

EN - 10 555 Signal Generator சுற்றை அமைத்தல்

கீழே தரப்பட்ட சுற்றை Project boad இல் அமைக்க.

Output ஐ CRO இல் காண்பிக்க.



மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	555 IC தெரிந்தெடுத்தல்	10	
2	தடை, கொள்ளளவிகளைத் தெரிந்தெடுத்தல்	20	
3	மின்சுற்றை அமைத்தல்	40	
4	Paper Supply வழங்கி Output ஐ C.R.O இல் பெறுதல்	20	
5	ஒழுங்கமைப்பு	10	
	மொத்தம்	100	

சோதனை இலக்கம்: EN - 11 Seven Segment சுற்று ஒன்றை அமைத்தல்.

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. Digital Electronic Deemo kit
2. IC - NE555 - 01No
3. IC - CD 4033 - 01 No
4. 100kΩ - 03 No
5. 1kΩ - 01 No
6. 2200µf - 01 No
7. 1µf - 01 No
8. 1MVR - 01 No
9. இணைக்கும் வடங்கள்

செய்முறை

ஓர் Digital இலக்க வெளிப்படுத்தி (Display) யின் ஒரு இலக்க செயற்பாட்டிற்கான ஒரு கட்டுப்படுத்தி சுற்று ஒன்றினை கீழே உள்ள சுற்று வரிப்படமானது காட்டுகிறது. இச்சுற்றினை உமக்கு வழங்கப்பட்டுள்ள "Digital Electronic Demo Kit" இன் உதவியுடன் வழங்கப்பட இலத்திரனியல் மூலகங்களைக் கொண்டு நிறுவுக.



CD 4033 இல் உள்ள A, B, C, D, E, F, G என்பவற்றை Digital Display இன் A, B, C, D, E, F, G என்ற ஒழுங்கில் இணைக்குக.

கவனிக்குக.

சுற்றிற்கு வழங்கலை அளிப்பதன் முன்னர் பரீட்சகருக்கு அறிவிக்க.

S_1 எனும் பொத்தான் ஆளியை Push Switch அழுத்துவதன் மூலம் இலக்கங்களை Display இல் மாற்றிக் காட்டுக.

மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	முன்னாயத்தம்	10	
2	பாதுகாப்பு மற்றும் அவதானம்	10	
3	✧ NE SSS IE நிறுவல்	10	
	✧ CD 4033 IC இனை நிறுவல்	20	
	✧ Push Switch இனை சரியாக நிறுவல்	10	
	✧ கொள்ளவிகளை / Capacitors இனை சரியாக முடிவிடங்களில் (நேர், மறை) இணைத்தல்.	20	
4	சுற்றினை சரியாக அமைத்தல்	10	
5	நல்ல வேலைப்பழக்கம்	10	
	மொத்தம்	100	

சோதனை இலக்கம்: EN - 12.1 தருக்க வாயில்களைப் பயன்படுத்தி தருக்க சுற்றை அமைத்தல்

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. 7400, 7402, 7408, 7432 தருச்சுற்று படலைகள். (IC)
2. தடைகள் (220Ω)
3. LED
4. logic Pro
5. Project board
6. DC Power Supply

செய்முறை

உகந்த துணையுறுப்புக்களைத் தெரிந்தெடுத்து வாயிற் சுற்றை அமைக்க. அதற்கு எல்லாத் தருக்க நிலைமைகளுக்கும் உரிய பெய்ப்புக்களை (input) வழங்கிப் பயப்பைச் (Output) சோதிக்க. அதனை ஒரு மெய்நிலை (உண்மை) அட்டவணையில் குறிக்க.



மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	IC தெரிந்தெடுத்தல்	*10*	
2	சுற்றை தொடுத்தல்	*10*	
3	ஆளிகளைத் தொடுத்தல்	*10*	
4	வழங்கலைத் தொடுத்தல்	*10*	
5	பயப்பைத் தொடுத்தல்	*10*	
6	மெய்நிலை அட்டவணையைப் பெறுதல்	*30*	
7	சுற்றின் செம்மை	*10*	
	மொத்தம்	*100*	

The National e-learning Portal for The General Education

சோதனை இலக்கம்: EN - 12.2 தருக்க வாயில்களைப் பயன்படுத்தி தருக்க சுற்றை அமைத்தல்

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

1. 7400, 7402, 7408, 7432 இலக்க IC
2. தடைகள் (220Ω)
3. LED
4. logig Pro
5. Project board
6. DC Power Supply

செய்முறை

நான்கு இயந்திரங்கள் கொண்ட ஒரு தொழிற்சாலையில் நான்கு இயந்திரங்களும் இயங்கும் போது மட்டும் மூலப்பொருள் உள்வாங்கும் வாயில் திறக்கப்படுவதை LED ஒளிர்வதன் மூலம் வெளிப்படுத்தும் சுற்றை, தருக்கவாயில் சுற்றுக்களைப் பயன்படுத்துக. கோர்க்க இயந்திரங்கள் இயங்கும் நிலை தருக்கம் *1* எனவும் LED ஒளிரும் தருக்கம் *1* எனவும் கருதுக.



கவனிக்க :

சுற்றைக் கோர்த்த பின்னர் வழங்கலைத் தொகுப்பதற்கு பின்னர் பரீட்சகரிடம் தெரிவிக்க.

மதிப்பீட்டுப் பத்திரம்

படிமுறை	விபரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	ஒன்றிணைந்த சுற்றைத் தெரிந்தெடுக்க.	10	
2	சுற்றைத் தொடுத்தல்	20	
3	ஆளியைத் தொடுத்தல்	10	
4	வழங்கலைத் தொடுத்தல்	10	
5	பயப்பைத் தொடுத்தல்	10	
6	மெய்நிலை அட்டவணை	30	
7	சுற்றின் செம்மை	10	
	மொத்தம்	100	

The National e-learning Portal for The General Education

பொறிமுறை தொழினுட்பவியல்

Mechanical Technology

The National e-learning Portal for The General Education

Technical Education Unit, Provincial Department of Education, Northern Province

பரிசோதனை MA - 01

இயந்திரப் பாகங்களை இனங்காணல்

ஆசிரியருக்கு உரியது

தேவையான உபகரணங்கள்

- ✧ Four Stroke petrol Engine or *மாதிரி வடிவம்*
- ✧ Four Stroke Diesel Engine or *மாதிரி வடிவம்*
- ✧ Two Stroke petrol Engine or *மாதிரி வடிவம்*
- ✧ Two Stroke Diesel Engine or *மாதிரி வடிவம்*

செயல்முறை ஒழுங்கு

1. மேற்குறித்த இயந்திரங்களை மாணவருக்கு காண்பித்து மாணவருக:கு பகுதிகளை அடையாளப்படுத்தல்.
2. அடிப்பு முறைகளை விளக்கங் கொடுத்தல்.
3. T.D.C & B.D.C புள்ளிகளை அடையாளங் காண கற்றுக் கொடுத்தல்.
4. வால்வு, முசலம், சுழற்சித்தண்டு என்பவற்றின் இயக்கங்களை அடையாளப்படுத்தல்.
5. இயந்திரத்திற்குள் தகன அறையில் இருந்து பழுச்சக்கரம் வரைக்கும் வலு ஊடு கடத்தலை வகைப்படுத்துக.
6. பழுச்சக்கரத்தின் தொழிலை விளக்கப்படுத்தல்.
7. இணைக்கும் தண்டு சுழற்சித்தண்டில் சக்தி எவ்வாறு மாறுகின்றது என்பதை விளக்கங் கொடுத்தல்.

செயல்முறை ஒழுங்கில் 2, 3, 4, 5, 6, 7 இருந்து வினாக்கொத்துக்களை வழங்கி ஒப்படை மூலம் வீடை அளிக்க வைக்க.

பரிசோதனை MA - 02

உருளைத் தலையின் ஓர் உருளையின் வால்புகளை அரைத்தல்

ஆசிரியருக்கு உரியது

உபகரணங்களும் பொருட்களும்

- ஓர் உருளைக்கு இரு வால்வுகள் உள்ள உருளைத்தலை (எஞ்சினிலிருந்து நீக்கப்பட்ட வால்வுகள் பொருத்தப்பட்ட)
- வேலை மேசை
- கருவிப்பெட்டி (பின்வரும் உபகரணங்கள் கட்டாயம் இடம்பெறல் வேண்டும்.)
  - திருகாணி செலுத்திகள் (தட்டை 8mm - 12mm அளவு)
  - ஒரு சுத்தியல் (சாதாரண அளவு)
  - கூர்க் குறடு
- வால்வு உயர்த்தி (Valve lifter) - உருளைத் தலைக்குப் பொருத்தமான பிடியி C வகை
- Coarse (rough) Valve grinding compound - 50ml
- Fine Valve grinding compound - 50ml
- ஒரு தட்டு (900mm x 750 mm அளவுள்ள)
- மண்ணெண்ணை - 500ml x 10
- தூரிகை (1")
- பெற்றோல் - 50ml x 10
- Valve lapping tool - 2 (பொருத்தமானவாறு)
- துணித் துண்டுகள் - 5kg

பாதுகாப்பு உபகரணங்கள்

- கையுறை (goggles)
- பொருத்தமான உடைகள் (Overall)

வினா : வழங்கப்பட்டுள்ள உருளைத்தலையிலே ஓர் உருளையில் உள்ள வால்வுகளை அரைக்க, அரைப்பதற்கு முன்னர் பரீட்சகர் அறிவுறுத்த வேண்டும். வால்வுகளை அரைப்பதற்குப் பாதுகாப்பு முறைகளையும் செயல் ஒழுங்குமுறைகளையும் பின்பற்றி வால்வுகளை அரைத்து அதன் செம்மையை உறுதிப்படுத்திக் காட்டுக.

செயல்முறை ஒழுங்குமுறை

- தொழிலுக்கு உகந்த ஒரு இடத்தில் உருளைத் தலையைத் தானப்படுத்துக.
- தேவையான உபகரணங்களைத் தெரிந்தெடுத்தல்.
- Valve lifter ஐக் கொண்டு வால்வைக் கழற்றல்
- முதலில் rough Valve grinding compound ஐப் பயன்படுத்தி அரைத்தல்.
- இரண்டாவதாக fone Valve grinding compound ஐப் பயன்படுத்தி அரைத்தல்.
- மண்ணெண்ணையும் தூரிகையையும் பயன்படுத்தி துப்புரவாக்கல்
- வால்வுகளை சரியாக உருளைத் தலையில் பொருத்தல்
- பெற்றோலைப் பயன்படுத்தி வால்வு அடைத் தொட்டலைச் சோதித்தல்.

செய்முறை

மாணவருக்குரியது

வழங்கப்பட்டுள்ள உருளைத் தலையின் ஓர் உருளையில் உள்ள வால்வுகளை அரைக்க முன்னர் பரீட்சகர் அறிவுறுத்துவார். வால்வுகளை அரைப்பதற்கு பாதுகாப்பு முறைகளையும் செயல்ஒழுங்கு முறையையும் பின்பற்றி வால்வுகளை அரைத்து அதன் செம்மையை உறுதிப்படுத்திக் காட்டுக.

தனியாள் மதிப்பீட்டு பத்திரம்

01. ஓர் உருளைத் தலையில் உருளையின் வால்வுகளை அரைத்தல்

படிமுறை	விவரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	**முன்னாயத்தம்**		
	i. சரியான கருவிகளையும் உபகரணங்களையும் தெரிந்தெடுத்தல்	05	
	ii. தொழிலுக்கு உகந்த ஒருவராக வருதல் ✺ பாதுகாப்புத் தீங்கு பயக்குமாறு ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்தல். ✺ உகந்த பாதணிகளை அணிந்திருத்தல். ✺ நீளமான தலைமயிர் வெளியே பரந்திருப்பதைத் தவிர்த்தல். அதற்காக வெறும்பு மறைப்புக்குக் கீழே அலங்கரித்தல். ✺ உகந்த ஓர் உடையை அணிந்திருத்தல்.	05	
2	**பாதுகாப்பு உத்தி பற்றிய கவனம்**		
	I. தொழிலுக்கு உகந்த ஓர் இடத்தில் உருளைத் தலையைத் தானப்படுத்தல். ✺ எண்ணெய், கொழுப்பு ஆகியன படியாத இடமாக இருத்தல். ✺ கருவிகள் பாதுகாப்பற்று இராமை. ✺ வேலைப் பகுதியைப் பாதுகாப்பற்று வைக்காமை.	10	
3	**சிக்கனமும் சரியான நுட்பமுறைகளும்**		
	I. வால்வுகளைக் கழற்றி அகற்றலும் சரியாகத் திரும்பப் பொருத்தலும்	20	
	ii. வால்வுகளை அரைத்தல்.	20	
	iii. அரைத்தல் சரியாவெனச் சோதித்தல்.	10	
4	**இறுதி விளைவு**		
	I. வால்வைச் சோதிக்கும்போது அரைத்தல் சரியாக இருத்தல். இராவிட்டால் அரைத்தற் செயன்முறையை மறுபடியும் பின்பற்றல் ✺ வால்வை அரைத்த பின்னர் அதன் இறுதி வினாவின் செம்மை பற்றி அறிவிக்க வேண்டும்.	20	
5	**நல்ல வேலைப் பழக்கங்கள்**		
	i. கருவிகளையும் உபகரணங்களையும் துப்புரவாக்கல்	04	
	ii. கருவிகளையும் உபகரணங்களையும் சரியாகத் தானப்படுத்தல்	03	
	iii. வேலை மேசையைத் துப்புரவாக்கல்.	03	
	மொத்தப் புள்ளிகள்	100	

பரிசோதனை MA - 03

வழங்கப்பட்ட ஓர் எஞ்சின் தெரிந்தெடுத்த ஓர் உருளையின் வால்வு இளக்கத்தைச் செப்பஞ் செய்தல்

ஆசிரியருக்கு உரியது

உபகரணங்களும் பொருட்களும்

- ஓர் ஆதாரத்தில் பொருத்தப்பட்ட செப்பஞ் செய்யத்தக்க ஆட்டி உள்ள ஓர் எஞ்சின்
- கருவிப்பெட்டி (பின்வரும் உபகரணங்கள் இருத்த வேண்டும்)
  - உணர் கணிச்சி (0.05mm - 1mm_ (filler Gauge)
  - வளையச் சாவி (Ring Spanners) 8mm - 24mm)
  - சுழற்றித் தண்டு சுழல்வதற்குக் குறித்த சாவி
  - திருகாணி செலுத்தி
  - ஓர் ஆதாரத்தில் பொருத்தப்பட்ட செப்பஞ்செய்யத்தக்க எஞ்சின்
  - துணித்துண்டு (Cotton Waste) - 1kg

பாதுகாப்பு உபகரணங்கள்

- பொருத்தமான உடைகள் (Overall)
- பரீட்சைக்கு ஓர் உதவியாளர் அவசியம்

வினா : வழங்கப்பட்டுள்ள ஓர் எஞ்சினின் தெரிந்தெடுத்துள்ள ஓர் உருளையின் வால்வு இணக்கத்தைக் கீழே தரப்பட்டுள்ள விவரக் கூற்றுக்களுக்கேற்பச் செப்பஞ் செய்க.

உறிஞ்ச வால்வு இளக்கம் = 0.20m

வெளியகற்று வால்வு இளக்கம் = 0.30mm

செயல் ஒழுங்குமுறை

1. தொழிலுக்கு உகந்த ஓர் இடத்தில் எஞ்சினை வைக்க வேண்டும்.
2. தேவையான சரியான உபகரணங்களைத் தெரிந்தெடுத்தல்.
3. எஞ்சின் தலையில் தப்பெற்று மூடியைக் (Tapper Cover) கழற்றி நீக்கல்.
4. வால்வு இளக்கத்தை நிச்சமயாகச் செப்பஞ் செய்யத்தக்கதாகச் சுழற்றிச் தண்டைச் சுழற்றல்.
5. உரிய பெறுமானமுள்ள உணர் கணிச்சியைத் தெரிந்தெடுத்தல்.
6. குறித்த பெறுமானங்களுக்கு உரியதாகத் தெரிந்தெடுத்த உணர் கணிச்சியைப் பயன்படுத்தி இளக்கத்தை அமைத்தல்.
7. எஞ்சின் தலையில் மூடிகளைப் பொருத்தல்.
8. சரியாகத் தொழிலை முடித்தல்.

செய்முறை

மாணவருக்குரியது

வழங்கப்பட்டுள்ள ஓர் எஞ்சினின் தெர்ந்தெடுத்த ஓர் உருளையில் வால்வு இளக்கத்தைக் கீழே தரப்பட்டுள்ள விவரக் கூற்றிற்களுக்கு என்பன செப்பஞ் செய்க.

உறிஞ்சல் வால்வு இளக்கம் = 0.20mm வெளியற்று வால்பு V = 0.30mm

தனியாள் மதிப்பீட்டு பத்திரம்

வழங்கப்பட்ட ஓர் எஞ்சினின் தெரிந்தெடுத்த ஓர் உருளையின் வால்வு இனக்கத்தைச் செப்பஞ் செய்தல்.

படிமுறை	விவரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	**முன்னாயத்தம்**		
	i. சரியான கருவிகளையும் உபகரணங்களையும் தெரிந்தெடுத்தல்	05	
	ii. தொழிலுக்கு உகந்த ஒருவராக வருதல் ✺ பாதுகாப்புக்குத் தீங்கு பயக்குமாறு ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்தல். ✺ உகந்த பாதணிகளை அணிந்திருத்தல். ✺ நீளமான தலைமயிர் வெளியே பரந்திருப்பதைத் தவிர்த்தல். அதற்காக வெறும்பு மறைப்புக்குக் கீழே அலங்கரித்தல். ✺ உகந்த ஓர் உடையை அணிந்திருத்தல்.	05	
2	**பாதுகாப்பு உத்தி பற்றிய கவனம்**		
	i. தொழிலுக்கு உகந்த ஓர் இடத்தில் உருளைத் தலையைத் தானப்படுத்தல். ✺ எண்ணெய், கொழுப்பு ஆகியன படியாத இடமாக இருத்தல். ✺ கருவிகள் பாதுகாப்பற்று இராமை. ✺ வேலைப் பகுதியைப் பாதுகாப்பற்று வைக்காமை.	10	
3	**சிக்கனமும் சரியான நுட்பமுறைகளும்**		
	i. எஞ்சின் தலையில் மூடியைக் கழற்றல்.	10	
	ii. வால்வு இணக்கத்தைச் செப்பஞ் செய்யத்தக்கதாகச் சுழற்றித் தண்டைச் சுழற்றல்.	10	
	iii. ஒவ்வொரு வால்வுக்கும் உரிய இலக்கத்தை உணர் கணிச்சிணைப் பயன்படுத்திச் செப்பஞ் செய்தல். (தரப்பட்டுள்ள பெறுமானத்திற்கு 0.5அஅ இற்கு இடமளிக்கலாம்)	20	
	iv. எஞ்சின் தலையில் மூடியை மறுபடியும் பொருத்தல்	10	
4	**இறுதி விளைவு**		
	i. குறித்த பெறுமானங்களுக்கேற்ப வால்வு இனக்கத்தைத் தயார் செய்தல்.	20	
5	**நல்ல வேலைப் பழக்கங்கள்**		
	i. கருவிகளையும் உபகரணங்களையும் துப்புரவாக்கல்	04	
	ii. கருவிகளையும் உபகரணங்களையும் சரியாகத் தானப்படுத்தல்	03	
	iii. வேலை மேசையைத் துப்புரவாக்கல்.	03	
	மொத்தப் புள்ளிகள்	100	

பரிசோதனை MA - 04

ஓர் எஞ்சினின் உருளைத் தலையை வழங்கப்பட்டுள்ள விவரக்கூற்றுக்களுக்கேற்ப பொருத்துதல்.

ஆசிரியருக்கு உரியது

உபகரணங்களும் பொருட்களும்

- ✧ தரப்பட்டுள்ள முறுக்குத் திறனுக்கேற்ப உருளைத் தலையைப் பொருத்துவதற்குப் பொருத்தமான எஞ்சின்
- ✧ முறுக்கு முறுகல்
- ✧ உரிய சாவி = (உ - ம் : குறித்த அளவுள்ள box piece)
- ✧ துணித்துண்டு (Cotton Waste) - 1 kg

பாதுகாப்பு உபகரணங்கள்

- ✧ பொருத்தமான உடைகள்
- ✧ பரீட்சைக்கு ஓர் உதவியாளர் அவசியம்

வினா : வழங்கப்பட்டுள்ள உருளைத் தலையைக் குறித்த செயல் ஒழுங்குமுறையைப் பின்பற்றி உருளை உடலில் பொருத்துக. எஞ்சின் தலையை மூடியையும் (Teppet Vover) பொருத்துக. உருளைத் தலையில் ஆணிகளை இருக்க வேண்டிய முறுக்குதிறன் 20Nm ஆகும்.

செயல் ஒழுங்குமுறை

1. தொழிலுக்கு உகந்த ஓர் இடத்தில் எஞ்சினை வைக்க வேண்டும்.
2. தேவையான சரியான உபகரணங்களைத் தெரிந்தெடுத்தல்.
3. எஞ்சின் உடலில் குறித்தவாறு இணைப்பிறுக்கியை இடுதல்.
4. எல்லா ஆணிகளையும் உருளையின் தலையில் உரிய துளைகளில் இடுதல்.
5. எல்லா ஆணிகளையும் உரிய குழாய்ச் சாவி மூலம் மிகவும் மெதுவாக இறுக்கல்.
6. உருளைத் தலையைப் பொருத்தும்போது பயன்படுத்தும் ஆணிகளைக் குறைந்தபட்சம் இரு தடவையேனும் இறுக்க வேண்டும். (உ - ம் : முதலில் 10Nm, இரண்டாவதாக 20Nm)
7. நியமங்களுக்கேற்ப உருளைத் தலையல் ஆணிகளை இறுக்குதல்
8. எல்லா ஆணிகளும் குறித்த முறுக்கு திறனிற்கேற்ப இறுக்கியுள்ளதாவென மறுபடியும் சோதித்தல்.
9. எஞ்சின் தலை மூடியைப் பொருத்துதல்.
10. சரியாகத் தொழிலை முடித்தல்.

செய்முறை

மாணவருக்குரியது

வழங்கப்பட்டுள்ள உருளைத் தலையைக் குறித்த செயல் ஒழுங்கு முறையைப் பின்பற்றி உருளை உடலில் பொருத்துக. எஞ்சினின் தப்பெற்று மூடியையும் (Tapnet Cover) பொருத்துக. உருளைத் தலையில் இறுக்கப்பட வேண்டிய முறுக்குத்திறன் 20Nm ஆகும்.

தனியாள் மதிப்பீட்டு பத்திரம்

ஓர் எஞ்சினில் உருளைத் தலையை வழங்கப்பட்டுள்ள விவரக்கூற்றுக்களுக்கேற்ப பொருத்தல்.

படிமுறை	விவரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	**முன்னாயத்தம்** I. தொழிலுக்கு உகந்த ஒருவராக வருதல் ✺ பாதுகாப்புக்குத் தீங்கு பயக்குமாறு ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்தல். ✺ உகந்த பாதணிகளை அணிந்திருத்தல். ✺ நீளமான தலைமயிர் வெளியே பரந்திருப்பதைத் தவிர்த்தல். அதற்காக வெறும் மறைப்புக்குக் கீழே அலங்கரித்தல். ✺ உகந்த ஓர் உடையை அணிந்திருத்தல். ii. சரியான கருவிகளையும் உபகரணங்களையும் தெரிந்தெடுத்தல்.	05 05	
2	**பாதுகாப்பு உத்தி பற்றிய கவனம்** ✺ கருவிகள் பாதுகாப்பற்று இராமை. ✺ வேலைப் பகுதியைப் பாதுகாப்பற்று வைக்காமை.	10	
3	**சிக்கனமும் சரியான நுட்பமுறைகளும்** i. இணைப்பிறுக்கியை சரியாக இடுதல். ii. தரப்பட்டுள்ள நியமங்களுக்கேற்பத் தலையில் ஆணிகளை இறுக்குதல். iii. குறித்த முறுக்குத்திறனிக்கேற்பத் தலையில் ஆணிகள் இருக்கின்றனவாவென மறுபடியும் சோதித்தல்.	20 20 10	
4	**இறுதி விளைவு** i. குறித்த முறுக்குத்திறன்களிற்கேற்பத் தலையில் ஆணிகள் இறுகியிருத்தல்.	20	
5	**நல்ல வேலைப் பழக்கங்கள்** i. கருவிகளையும் உபகரணங்களையும் துப்புரவாக்கல் ii. கருவிகளையும் உபகரணங்களையும் சரியாகத் தானப்படுத்தல் iii. வேலை மேசையைத் துப்புரவாக்கல்.	04 03 03	
	மொத்தப் புள்ளிகள்	100	

பரிசோதனை MA - 05

தீப்பொறிச் செருகியின் இனக்கத்தை சீர்செய்தல்

ஆசிரியருக்கான விசேட அறிவுறுத்தல்

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

- தீப்பொறிச் செருகியுடன் கூடிய தனி உருளை இயந்திரம்.
- Feeler gauge உணர்மானி (0.05mm - 1mm)
- Flat Screw Driver தட்டை திருகாணி செலுத்தி (8mm - 12mm)
- Ring Spanner வளைய சாவி (8mm - 24mm)
- துணித்துண்டுகள்
- கை கழுவுவதற்கான ஒரு சவற்காரம்

பரிசோதனையை தயார்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்.

- தொழினுட்ப உதவியாளர் ஒருவரை வழங்குக.
- ஒவ்வொரு மாணவருக்கும் சோதனையை வழங்குவதற்கு
- தீப்பொறிச் செருகியின் இனக்கத்தை மாற்றி தனி உருளை இயந்திரத்துடன் இணைந்து வழங்கவும்.

செய்முறை

மாணவருக்குரியது

தீப்பொறிச் செருகி இணக்கத்தைச் சீர்செய்தல்.
உம்மிடம் தனி உருளை இயந்திரம் ஒன்று (தீப்பெறிச் செருகியின் இணக்கத்தை பரீட்சகரின் அவதானிப்பில் சீர்செய்க. (தீப்பொறிச் செருகியின் இணக்கம் 0.80mm எனவும் கொள்க.)

தனியாள் மதிப்பீட்டு பத்திரம்

படிமுறை	விவரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
01.	**முன்னாயத்தம்** ✧ சரியான கருவி உபகரணங்களை தெரிவுசெய்தல் ✧ தொழிற்கு உகந்த தொழில் விளைஞராக உருவாதல்	 (05 புள்ளி) (05 புள்ளி)	
02.	**பாதுகாப்பு உந்தி பற்றிய கவனம்** ✧ இயந்திர பாகங்களின் பாதுகாப்பு (எரிபற்றல் தொகுதியின்) ✧ கருவி உபகரணங்களின் பாதுகாப்பு	 (05 புள்ளி) (05 புள்ளி)	
03.	**சீக்கனமும் சரியான நுட்பமுறையும்** ✧ தீப்பொறிச் செருகியில் இருந்து கடத்தியை வேறுபடுத்தல். ✧ பொருத்தமான சாவியைப் பயன்படுத்தி தீப்பொறிச் செருகியை உருளைத் தலையில் இருந்து அகற்றல். ✧ தீப்பொறிச் செருகி கழற்றப்பட்ட உருளைத்தலையில் உள்ள தூவரத்தை அடைத்து பாதுகாத்தல். ✧ உரிய உபகரணத்தைப் பயன்படுத்தி தீப்பொறி செருகியின் மின்வாயில் உள்ள காபனை அகற்றி பெற்றோலினால் கழுவுதல்.	 (05 புள்ளி) (07 புள்ளி) (08 புள்ளி) (20 புள்ளி)	
04.	**இறுதி விளைவு** ✧ உரிய மின்வாய் இடவெளியுடன் உரிய இறுக்கத்தில் இறுக்கப்பட்டிருத்தல்	 (20 புள்ளி)	
05.	**சிறந்த வேலைப்பழக்கம்** ✧ கருவி உபகரணங்களை துப்பரவு செய்தல் ✧ உரிய இடத்தில் களஞ்சியப்படுத்தல் ✧ வேலை இடத்தை சுத்தம் செய்தல்.	 (03 புள்ளி) (03 புள்ளி) (04 புள்ளி)	
	மொத்தம்	100	

பரிசோதனை Ma - 06

தட்டுப் தடுப்பின் தடுப்புப் போர்வைகளினை மாற்றல்

ஆசிரியருக்கான விசேட அறிவுறுத்தல்

உபகரணங்களும் பொருட்களும்

- உகந்த சமதள நிலம் உள்ள ஓர் இடத்தில் முன்பக்கச் சில்லைச் கழற்றுவதற்கு உரிய ஓர் இலேசான மோட்டார் வாகனம்.
- ஒரு வாகன உயர்த்தியும் (நிறைக்கு பொருத்தமான) ஒரு பலகையும்
  - ஆப்பு (சில்லுகளைச் சிறைப்படுத்துவதற்கு 4 கட்டைகள்)
  - சில்லு சுரை கழற்றி
  - ஒரு சிறிய தட்டு
  - ஓர் ஆகாரம்
  - துணித்துண்டு (Cotton Waste) - 1 kg
  - நில விரிப்பு (1200mmx 750mm) அல்லது அதற்கு கிட்டிய)
  - புதிய தட்டுப்போர்வைகள்

பாதுகாப்பு உபகரணங்கள்

- பொருத்தமான உடைகள்

செயல் ஒழுங்குமுறைகள்

1. தொழிலுக்கு உகந்த இடத்தில் வாகனத்தை நிப்பாட்டி வைத்திருத்தல்.
2. பின்சில்லின் இரு பக்கங்களிலும் ஆப்புக்களை வைத்து வாகனத்தை நிலையாக வைத்தல் / Hand Brake இனை பிரயோகித்தல்.
3. கழற்ற வேண்டிய சில்லின் சுரைகளைச் சிறிதளவில் தளர்த்தல்.
4. கழற்ற வேண்டிய சில்லு சுயாதீனமாகச் சூழதக்க மட்டத்திற்கு வாகனத்தை உயர்த்துதல்.
5. வாகனத்தை ஆதாரத்தின் மீது நிற்க விடுதல்.
6. எல்லாச் சுரைகளையும் கழற்றி சில்லை அகற்றல்.
7. இடுக்கி இணை (Capliper) அகற்றி புதிய தடுப்புப் போர்வையை மாற்றல்.
8. சில்லைப் பொருத்துதல்.
9. மறுபடியும் உயர்த்தியைக் கொண்டு சிறிதளவில் உயர்த்தி ஆதாரத்தைஅகற்றல்.
10. உயர்த்தியை அகற்றல்
11. எல்லாச் சுரைகளையும் ஒழுங்காக இறுக்குதல்.
12. பயன்படுத்தி கருவிகளையும் உபகரணங்களையும் துப்பரவாக்கல்
13. சரியாக தொழிலை முடித்தல்.

செய்முறை

மாணவருக்குரியது

பாதுகாப்பு முறையையும் ஒழுங்கு முறையையும் பின்பற்றி வழங்கப்பட்டுள்ள இலேசான மோட்டார் வாகனத்தின் முற்பக்கச் சில்லு ஒன்றின் தடுப்புப் போர்வைகளை (னுளைம டீசயமந) மாற்றல். மோட்டார் வாகனத்தை உயர்த்துவதற்கு முன்னர் பரீட்சகர் அறிவுறுத்தி அவருடைய மேற்பார்வையின் கீழ் செய்க.

தனியாள் மதிப்பீட்டு பத்திரம்

படிமுறை	விவரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
01	**முன்னாயத்தம்**		
	✺ பொருத்தமான கருவி உபகரணங்களைத் தெரிவுசெய்தல்	*(10 புள்ளி)*	
	✺ தொழிலுக்கு உகந்த தொழில் வினைஞராக தயாராதல் (பாதுகாப்பு அணிகள்)	*(5 புள்ளி)*	
02	**பாதுகாப்பு உத்தி பற்றிய கவனம்**		
	✺ வாகனத்தின் பாதுகாப்பு	*(5 புள்ளி)*	
	✺ கருவி உபகரணத்தின் பாதுகாப்பு	*(5 புள்ளி)*	
03	**சிக்கனமும் நுட்பமுறையும்**		
	✺ வாகனம் உருளாதாவாறு பின் சில்லுக்கு எடைவைத்தல்	*(5 புள்ளி)*	
	✺ தடுப்பு கழற்ற வேண்டிய சில்லின் சுரைகளை இழக்குதல்	*(5 புள்ளி)*	
	✺ உயர்த்தியைப் பொருத்தமான இடத்தில் வைத்து வாகனத்தை உயர்த்தல்	*(10 புள்ளி)*	
	✺ சக்கரத்தின் சுரைகளை கழற்றி சக்கரத்தை வேறுபடுத்தல்.	*(5 புள்ளி)*	
	✺ தடுப்புக்குரிய பாதங்களை அகற்றுதல்.	*(7 புள்ளி)*	
	✺ தடுப்பு தட்டினையும் பகுதிகளையும் துப்பரவு செய்தது. மீளவும் ✺ புதிய பாகங்களை மாற்றுதல்	*(8 புள்ளி)*	
	✺ சக்கரத்தை வாகனத்துடன் பொருத்துதல்	*(10 புள்ளி)*	
04	**இறுதி விளைவு**		
	✺ தட்டுத்தடுப்புகள் உரியவாறு தொழில்படுதல்	*(15 புள்ளி)*	
	✺ வாகனத்தை உயர்த்தியில் இருந்து இறக்கி அடைகளை அகற்றல்	*(5 புள்ளி)*	
05	**வேலைப்பழக்கம்**		
	✺ கருவி உபகரணங்களையும் சுத்தம் செய்து மீள ஒழுங்குபடுத்தல்	*(4 புள்ளி)*	
	✺ கருவி உபகரணங்களைச் சரியான இடங்களில் களஞ்சியப்படுத்தும் இடத்தினை துப்பரவு செய்தல்.	*(6 புள்ளி)*	
	மொத்தம்	*100 புள்ளி*	

பரிசோதனை MA - 07

வெப்ப நிறுத்தி வால்வினை பரிசோதித்தல்

ஆசிரியருக்கான விடேச அறிவுறுத்தல்

தேவையான பொருட்கள்

- வெப்பநிறுத்தி வால்வு
- வெப்பமானி
- தேவையான அளவு நீர்
- கண்ணாடிப் பாத்திரம்
- பென்சன் சுடர் அடுப்பு

செயல்முறை ஒழுங்கு

1. கண்ணாடிப் பாத்திரம் ஒன்றினுள் நீர் எடுத்தல் வேண்டும்.
2. அதனுள் வெப்ப நிறுத்தி வால்வு, வெப்பமானி என்பவற்றினை இட்டு பன்சன் சுடர் அடுப்பின் மீது வைத்து தொகுதியை சூடுகாட்டல் வேண்டும்.
3. சூடு ஆக்கும் போது வெப்பநிறுத்தி வால்வு திறக்கும் வெப்பநிலையைக் குறித்தல் வேண்டும்.
4. பின்பு சூடாக்கலை நிறுத்தி குளிர விட வெப்பநிறுத்தி வால்வு மூடும் வெப்பநிலையை குறித்தல் வேண்டும்.

வினா?

வெப்பநிறுத்தி வால்வு தொழிற்பாட்டு வெப்பநிலையில் வேலை செய்கின்றதா என்பதனை ஆராய்தல்.

செய்முறை

மாணவருக்கான வினாப்பத்திரம்

வெப்பநிறுத்தி வால்வு ஆனது தொழில் பாட்டு வெப்பநிலையில் வேலை செய்கின்றாதா என்பதனை ஆராய்தல்.

தனியாள் மதிப்பீட்டு பத்திரம்

படிமுறை	விவரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	**முன்னாயத்தம்** i. சரியான கருவிகளையும் உபகரணங்களையும் தெரிந்தெடுத்தல்.	10	
2	**பாதுகாப்பு உத்தி பற்றிய கவனம்** i. கையுறைகள் பாவித்தல் ii. Googles iii. கருவிகளையும் உபகரணங்களையும் பாதுகாப்பாக கையாளுதல்.	10	
3	**செயல்முறை ஒழுங்கு பின்பற்றப்பட்டால்** I. ii. iii. } செயல்முறை ஒழுங்கில் குறிக்கப்பட்டுள்ளது	30	
4	**இறுதி விளைவு** i. அளவீடுகள் சரியாக இருத்தல்.	30	
5	**நல்ல வேலைப் பழக்கங்கள்** i. கருவிகளையும் உபகரணங்களையும் துப்புரவாக்கல் ii. கருவிகளையும் உபகரணங்களையும் சரியாகத் தானப்படுத்தல் iii. செயற்பாட்டில் ஈடுபடும் இடத்தையும் சுற்றாடலையும் துப்பரவாக்கல்.	20	
	மொத்தப் புள்ளிகள்	100	

பரிசோதனை MA - 08

ஒரு பெற்றோல் என்ஜினுக்குரிய தொடுகை முனை இளக்கத்தையும் தீப்பொறிச் செருகி இளக்கத்தையும் தயார்செய்து பற்றரிச் சுருள் எரிபற்றல் தொகுதியைக் கோத்தல்

ஆசிரியருக்கான விடேச அறிவுறுத்தல்

வழங்க வேண்டிய உபகரணங்களும் பொருட்களும்

- தொடுகை முனைகள் (CB Points) கொண்ட பெற்றோல் என்ஜின் (கழற்றி அகற்றத்தக்க எல்லாத் தொகுதிகளையும் கொண்டது)
- Bench Vice மேசை ஒன்றில் பொருத்தப்பட்ட இடுக்கி
- Feeler guage உணர்மானி (0.05mm - 1mm)
- Philips Screw Driver பிலிப்ஸ் திருகாணி செலுத்தி (8mm - 12mm)
- Flat Screw Driver தட்டை திருகாணி செலுத்தி (8mm - 12mm)
- Ring Spanner வளையச் சாவி (8mm - 24mm)
- Plug Box செருகிப் பெட்டி (என்ஜினுக்குப் பொருத்தமானது)
- துணித்துண்டுகள்
- கை கழுவுவதற்கான ஒரு சவர்க்காரம்

சோதனையை தயார்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

- தொழினுட்ப உதவியாளர் ஒருவரை வழங்குக.
- ஒவ்வொரு மாணவருக்கும் சோதனையை வழங்குவதற்கு முன்னர் எரிபற்றல் தொகுதியின் அனைத்து கம்பிகளையும் கழற்றி வைக்க.

செய்முறை

மாணவருக்குரிய அறிவுறுத்தல்

சோதனை எண் : MA - 08

பெற்றோல் எஞ்சினுக்குரிய தொடுகை முனை இளக்கத்தையும் தீப்பொறிச் செருகி இளக்கத்தையும் தயார்செய்து பற்றரிச் சுருள் எரிபற்றல் தொகுதியைக் கோத்தல்.

உம்மிடம் தொடுகை முனைகள் உள்ள ஓர் எரிபற்றல் தொகுதியைக் கொண்ட ஓர் என்ஜின் வழங்கப்பட்டிருக்கும் அதேவேளை அதன் தொடுகை முனை இளக்கத்தையும் தீப்பொறிச் செருகி இளக்கத்தையும் பரீட்சகரின் அவதானிப்பில் தயார்செய்து எரிபற்றற் சுற்றைக் கோக்க. தொடுகை முனை இளக்கம் 0.50mm எனவும் தீப்பொறிச் செருகி இளக்கம் 0.80mm எனவும் கொள்க.

தனியாள் மதிப்பீட்டு பத்திரம்

படிமுறை	விவரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	**முன்னாயத்தம்** i. சரியான கருவிகளையும் உபகரணங்களையும் தெரிந்தெடுத்தல். ii. ✧ தொழிலுக்கு உகந்தவராக வருதல் ✧ பாதுகாப்புக்குத் தீங்கு பயக்குமாறு ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்தல். ✧ உகந்த பாதணிகளை அணிந்திருத்தல். நீளமான தலைமயிர் வெளியே பரந்திருப்பதைத் தவிர்த்தல். அகற்ற வெறும் மறைப்புக்குக் கீழே அலங்கரித்தல். ✧ உகந்த உடையை அணிந்திருத்தல்.	5 5	
2	**பாதுகாப்பு உத்தி பற்றிய கவனம்** I. களண்ணெய், கொழுப்பு ஆகியன படியாத இடமாக இருத்தல். ii. கருவிகள் பாதுகாப்பு அற்று இராமை.	10	
3	**சிக்கனமும் சரியான நுட்பமுறைகளும்** i. Spark Plug இன் தொடுகையை இணைத்தல் ii. Igniton Coil இனுடைய தொடுகையை இணைத்தல். iii. Distribute இனுடைய தொடுகையை இணைத்தல் iv. Battery இனுடைய தொடுகையை இணைத்தல் v. Contact breaker இன் திருகை செப்பம் செய்தல் vi. தீப்பொறி செருகியின் இளக்கம் பார்த்தல்.	10 10 10 10 10 10	
4	**இறுதி விளைவு** i. தொடுகை முனை இளக்கம் 05 mm ii. தீப்பொறி செருகி இளக்கம் 0.8mm	5 5	
5	**நல்ல வேலைப் பழக்கங்கள்** i. கருவிகளையும் உபகரணங்களையும் துப்புரவாக்கல் ii. கருவிகளையும் உபகரணங்களையும் சரியாகத் தானப்படுத்தல் iii. செயற்பாட்டில் ஈடுபடும் இடத்தையும் சுற்றாடலையும் துப்பரவாக்கல்.	10	
	மொத்தப் புள்ளிகள்	100	

பரிசோதனை MA - 09

காபன் சேர் கருவியில் பெற்றோல் மேவிப் பாய்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், எரிபொருட் சீராக்கியை செப்பம் செய்தலும்

ஆசிரியருக்கான அறிவுறுத்தல்

உபகரணங்களும் பொருட்களும்

- காபன் சேர் கருவி
- பொருத்தமான சாவிகள்
- திருகாணி செலுத்திகள்
- எரிபொருள் (பெற்றோல்)
- கழிவு துணித்துண்டு
- காற்றுப்பம்பி

பாதுகாப்பு உபகரணங்கள்

- பொருத்தமான உடை (பாதுகப்பு அணிகலன்கள்)
  (மூக்குக் கவசம் / ஆடை)

செயல் ஒழுங்கு

1. வேலைக்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவுசெய்தல்.
2. பொருத்தமான கருவி உபகரணங்களை தெரிவுசெய்தல்.
3. பாதுகாப்பு அணிகலன்களை அணிதல்
4. காபன் சேர் கருவியை பகுதிகளாக வேறுபடுத்தல்
5. பகுதிகளில் உள்ள வால்புகள், திருகாணிகளை அகற்றல்
6. திருகணிகள் வால்புகளை பெற்றோலில் சுத்தம் செய்து உலரவிடல்.
7. மிதவை, மிதவை ஊசி, மிதவை அறை, தடுப்புக்குழாய் போன்றவற்றை சுத்தம் செய்து உலரவிடல்.
8. வால்புகள், திருகாணிகளை ஒழுங்குமுறைப்படி பயன்படுத்தி பொருத்துதல்.
9. உரிய பாகங்களை ஒன்றுடன் ஒன்று பொருத்துதல்.
10. எரிபொருள் தாங்கியில் இருந்து எரிபொருளை வழங்கி மேவிப் பாய்தல் தலை பரிசீலித்தல்.
11. பலர் பயன்படுத்தி கருவி உபகரணங்களை சுத்தப்படுத்தி களஞ்சியப்படுத்தல்.
12. வேலை இடத்தை துப்பரவு செய்தல்.

செய்முறை

மாணவருக்குரிய அறிவுறுத்தல்

வழங்கப்பட்டுள்ள காபன் சேர் கருவியை கழற்றி அதன் பாகங்களையும், பகுதிகளையும் சுத்தம் செய்து மீளவும் பொருத்தி மேவிப் பாய்தலை பரிசீலித்து மீளப் பொருத்துக.

தனியாள் மதிப்பீட்டு பத்திரம்

படிமுறை	விவரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
01	**முன்னாயத்தம்**		
	✺ வேலைக்குப் பொருத்தமான உபகரணத்தை தெரிவுசெய்தல்	(05 புள்ளி)	
	✺ பாதுகாப்பு	(05 புள்ளி)	
02	**பாதுகாப்பு உத்தி பற்றிய கவனம்**		
	✺ கருவி உபகரணங்களை பாதுகாப்பாக கையாளல்	(5 புள்ளி)	
	✺ வேலைப் பகுதியை பாதுகாத்தல்	(5 புள்ளி)	
03	**சிக்கனமும் நுட்பமுறையும்**		
	✺ திருகாணியை கழற்றி வாகனங்களை வேறுபடுத்தல்	(10 புள்ளி)	
	✺ பாகங்களில் உள்ள வால்புகள் / திருகாணிகளை வேறுபடுத்தல்	(10 புள்ளி)	
	✺ பாகங்களை பெற்றோலில் கழுவி உளர விடல்	(10 புள்ளி)	
	✺ காற்றுப்பம்பியின் உதவியுடன் துவாரங்களில் அடைப்புக்களை நீக்கல்	(10 புள்ளி)	
	✺ மீளக் கோர்த்தல்	(10 புள்ளி)	
04	**இறுதி விளைவு**		
	✺ உரிய முறையில் கோக்கப்பட்டு திருகாணிகள் இறுக்கப்பட்டிருத்தல்	(10 புள்ளி)	
	✺ எரிபொருள் குழாய் இணைக்கப்பட்ட பின் எரிபொருள் மேவிப் பாயாது இருத்தல்.	(10 புள்ளி)	
05	**நல்ல வேலைப்பழக்கம்**		
	✺ கருவி உபகரணங்களை சுத்தம் செய்தல்	(3 புள்ளி)	
	✺ உரிய இடத்தில் களஞ்சியப்படுத்தல்	(3 புள்ளி)	
	✺ வேலை இடத்தை துப்பரவு செய்தலும் கழிவு அகற்றலும்	(4 புள்ளி)	
	மொத்தம்	100 புள்ளி	

பரிசோதனை MA - 10

பாதுகாப்பு முறைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றி வழங்கப்பட்டுள்ள இலேசான வாகனத்தின் பிரதான விளக்குத் தொகுதியினை சரி பார்க்க. பரீட்சிப்பதற்கு மேற்பார்வையாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படுத்துக.

ஆசிரியருக்கான விசேட அறிவுறுத்தல்

ஓர் இலேசான வாகனத்தின் பிரதான விளக்குத் தொகுதியினை சரிபார்த்தல்.

- உபகரணங்களும் பொருட்களும்
  சமாதானத்தின் மீது சில்லுகளில் அளவான காற்றுடனும், சாதாரண பயணத்தின் போதான சுமையுடனுமான வாகனம்
- உபகரணங்களுடனான உபகரணப்பெட்டி
- ஒரு சிறிய தட்டு
- துணித்துண்டுகள்
  இணைப்புகள், வட்டங்கள், காவல்நாடா (Insulation Tape)
- பாதுகாப்பு உபகரணங்கள்
  (பொருத்தமான உடைகள், கையுறை, கண்ணாடி, இறப்பர், காலணி)
- செயல் ஒழுங்குமுறை

1. வாகனத்தினை சமதளமான உகந்த இடத்தின் மீது நிறுத்துக.
2. திற்களில் காற்றுகள் உரிய அளவில் உள்ளதா என சோதித்தல்.
3. வாகனம் பயணத்தின் போதான சாதாரண சுமையுடன் காணப்படுதல் வேண்டும்.
4. மின்கலத்தின் மின்கொள்ளவினைச் சரிபார்த்துக் கொள்ளவும்.
5. மின்கலத்தின் இணைப்புகள் களிம்பு படியாமலும் இறுக்கமாகவும், பழுதடையாமலும் உள்ளதாக என பரீட்சித்தல்.
6. பல்மானியை உதவியுடன் மின்கலம், மின்குமிழ், ஆளி ஒன்றுக்கும் இடையிலான தொடுப்புக்கள் சீராக உள்ளனவா என பரிசீலிக்கவும்.
7. தலைவிளக்கிற்கான உருகி, உருகிச் செருகி என்பன சீராக உள்ளதா எனப் பரீட்சிக்கவும்.
8. தலை விளக்குகள் இரண்டையும் கழற்றி அவற்றிலுள்ள பரீட்சித்தல்.
9. தலை விளக்குத் தொகுதியின் ஏனைய பாகங்களினைப் பரீட்சித்தல்.
10. சமதளமான நீளத்தில் 7.5m நிலைக்கு சுவர் ஒன்றின் முன்னால் நிறுத்தி தலைவிளக்குகளின் ஒளிக்கோளத்தை சீர்செய்தல்.
11. பயன்படுத்திய கருவிகளையும் உபகரணங்களையும் தூய்மைப்படுத்தி உரிய இடங்களில் வைத்தல்.
12. சரியாக தொழிலை முடித்தல்.

செய்முறை

மாணவருக்குரிய அறிவுறுத்தல்

பாதுகாப்பு முறைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றி வழங்கப்பட்டுள்ள இலேசான வாகனத்தின் பிரதான விளக்குத் தொகுதியினை சரி பார்க்க. பரீட்சிப்பதற்கு மேற்பார்வையாளர் அறிவுறுத்தல் களுக்கு அமைய செயற்படுக.

தனியாள் மதிப்பீட்டு பத்திரம்

பிரதான விளக்குத் தொகுதியினை சரிபார்த்தல்

படிமுறை	விவரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
1	மின்கலத்தின் மின்னேற்றத்தை பரீட்சித்தல்	10	
2	மின்கலத்தின் தொடுப்பினை பரீட்சித்தல்	10	
3	மின்கலத்திற்கும், மின்விளக்கிற்கும், ஆளி முனைகளுக்கு மிடையிலான இடையிலான தொகுப்பினை சரி பார்த்தல்	10	
4	தலை விளக்குகளின் மின்குமிழ்களை பரீட்சித்தல்	10	
5	தலை விளக்குகளின் உருகியினைப் பரீட்சித்தல்	10	
6	தலை விளக்குகளின் ஏனைய பாகங்களை பரீட்சித்தல் (வில்லை, பெரிதாக்கி, ரிம், விளக்குத்தாங்கி, மின்குமிழ், இறப்பர், உறை, தொகுப்புச் செருகி)	10	
7	மங்கள் விளக்கு, பிரதான விளங்கு என்பவற்றின் தனிக் கோணத்தினை சரி செய்தல் (சில்லுகளின் காற்றின் அளவு, வாகனத்தின் சாதாரண பயணத்தின் போதான சுமை, வாகனத்தின் தளம் ஆகியவற்றை கருத்தில் எடுக்கப்படல் வேண்டும்,)	20	
8	பாதுகாப்பும் சரியான நுட்பமுறைகளைப் பின்பற்றலும்.	10	
9	பயன்படுத்தும் உபகரணங்களை உரியமுறையில் ஒழுங்கமைத்தல்.	10	
	மொத்தம்	100 புள்ளி	

பரிசோதனை Ma - 11

பாதுகாப்பு முறைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றி வழங்கப்பட்டுள்ள இலேசான வாகனத்தின் தடுப்பு விளக்குத் தொகுதியினை சரி பார்க்க. பரீட்சிப்பதற்கு மேற்பார்வையாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படுத்துக.

ஆசிரியருக்கான விசேட அறிவுறுத்தல்

ஓர் இலேசான வாகனத்தின் தடுப்பு விளக்குகளைத் பரிசீலித்தல்

- ✧ உபகரணங்களும் பொருட்களும்
  இலேசான வாகனம், உபகரணங்களுடனான உபகரணப்பெட்டி, ஒரு சிறிய தட்டு, துணித்துண்டுகள், இணைப்புகள், வட்டங்கள், காவல்நாடா (Insulation tape)
- ✧ பாதுகாப்பு உபகரணங்கள்
  (பொருத்தமான உடைகள், இறப்பர் காலணி, கையுறை, கண்ணாடி,)

செயல் ஒழுங்குமுறை

1. மின்கலத்தின் மீள்கொள்ளவினைச் சரிபார்த்தல்.
2. மின்கலத்தின் இணைப்புக்கள் களிம்பு படியாமலும் இறுக்கமானதாகவும், பழுதடையமாலும் உள்ளதாக என சரி பார்த்தல்.
3. பல்மானியின் உதவியுடன் மின்கல அடுக்கு, தடுப்பு விளக்கு, தடுப்பு என்பவற்றுக்கு இடையிலான தொடுப்பினை சரிபார்த்தல்.
4. தடுப்பு விளக்கிற்கான உருகி, உருகிச் செருகி என்பன சீராக உள்ளதா என சரிபார்க்க.
5. தடுப்பு விளக்கினை பரிசிலிக்க.
6. தடுப்பு விளக்குதொகுதியின் செயற்பாட்டைப் பரிசிலிக்க.
7. பயன்படுத்தி கருவிகளையும், உபகரணங்களையும் தூய்மைப்படுத்தி உரிய இடங்களில் வைக்க.
8. சரியாக தொழிலினை முடிக்க.

செய்முறை

மாணவருக்குரிய அறிவுறுத்தல்

பாதுகாப்பு முறைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றி வழங்கப்பட்டுள்ள இலேசான வாகனத்தின் தடுப்பு விளக்குத் தொகுதியினை சரி பார்க்க. பரீட்சிப்பதற்கு மேற்பார்வையாளரின் அறிவுறுத்தல் களுக்கு அமைய செயற்படுக.

தனியாள் மதிப்பீட்டு பத்திரம்

படிமுறை	விவரம்	ஒதுக்கிய புள்ளிகள்	வழங்கிய புள்ளிகள்
01.	மின்கலத்தின் தொகுப்பினை சரிபார்த்தல்	10 புள்ளி	
02.	மின்கலம், தடுப்பு விளக்கு, தடுப்பு என்பவற்று இடையிலான இணைப்பை சரிபார்த்தல்	20 புள்ளி	
03.	உருகியினை சரிபார்த்தல்	20 புள்ளி	
04.	தடுப்பு விளக்கினை சரி பார்த்தல்	20 புள்ளி	
05.	பாதுகாப்பும் சரியான நுட்பமுறைகளையம் பின்பற்றல்	20 புள்ளி	
06.	பயன்படுத்திய உபகரணங்களையும் கருவிகளையும் தூய்மைப்படுத்தி உரிய இடங்களில் வைத்தல்.	10 புள்ளி	
	மொத்தம்	100 புள்ளி	

பரிசோதனை Ma - 12

பாதுகாப்பு முறைகளையும், நடைமுறைகளையும் பின்பற்றி வழங்கப்பட்டுள்ள இலேசான வாகனத்தின் சமிக்ஞை விளக்கு தொகுதியினை சரிபார்த்தல்.

ஆசிரியருக்கான விசேட அறிவுறுத்தல்

ஓர் இலேசான வாகனத்தின் சமிக்ஞை விளக்கு தொகுதியினைச் சரிபார்த்தல்.

- உபகரணங்களும் பொருட்களும்
  இலேசான வாகனம், உபகரணங்களுடனான உபகரணப்பெட்டி, ஒரு சிறிய தட்டு, துணித்துண்டுகள், இணைப்பிகள், வடங்கள், காவல்நாடா (Insulation tape)
- பாதுகாப்பு உபகரணங்கள்
  (பொருத்தமான உடைகள், இறப்பர் காலணி, கையுறை, கண்ணாடி,)
- செயல் ஒழுங்குமுறை

1. மின்கலத்தின் மீள்கொள்ளவினைச் சரிபார்த்தல்.
2. மின்கலத்தின் இணைப்புக்கள் களிம்பு படியாமலும் இறுக்கமானதாகவும், பழுதடையமாலும் உள்ளதாக என சரி பார்த்தல்.
3. பல்மானியின் உதவியுடன் மின்கல அடுக்கு, பளிச்சிடுவான் அலகு, எரிபற்றல் ஆனி, சமிக்ஞை விளக்கு, சமிக்ஞை விளக்கு, ஆளி, காடடி விளக்கு என்பவற்றுக:கு இடையிலான தொகுப்பினை சரிபார்த்தல்.
4. சமிக்ஞை விளக்கத்திற்கான உருகி, உருகித் செருகி என்பன சீராக உள்ளதாக என சரிபார்த்தல்.
